சங்கங்களைப் பொறுத்து இல்லை. பண்ணைகளை நடத்த வெள்ளை இனக் கோழி தான் தரமுள்ள கோழியாக இருக்கிறது. கப்பலூரிலே மிக அதிகமாக அதை வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

(திரு. சோ. அழகர்சாமி எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக்கேள்விக்கும் துணைக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லாமல் கேட்கிறீர்கள், அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள், அதிலிருந்து நீங்கள் இன்னும் ஒரு சம்பந்தம் இல்லாத துணைக் கேள்வி கேட்கவேண்டாம்.

திரு. சோ. அழகர்சாமி : அதே கேள்விதான். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதே கேள்வி என்று வேறு கேள்வியைக் கேட்கிறீர்கள். ஊர்வன, பறப்பன இதுபற்றியெல்லாம் ஒரே கேள்விதான் என்று துணைக்கேள்வியைக் கேட்கவேண்டாம்.

Assistance for Employees State Insurance Schemes

* 618 *Q.*—THIRU N. DENNIS,

THIRU S. DURAISAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the need for a greater financial assistance from the Centre for the Employees State Insurance Schemes was stressed during the discussions with the Central Minister for Labour in February 1973; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டத்தின் மருத்துவ வசதிக்கான செலவின்மேல் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் உச்ச வரம்பினை நிர்ணயித்துள்ளது. இந்த உச்சவரம்புப் படி தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் 7–8 பங்கும், மாநில அரசு 1/8 பங்கும் ஏற்றுக்கொள்ளவேண்டும். இந்த உச்சவரம்பிற்குமேல் ஆகும் செலவை மாநில அரசே ஏற்றுக்கொள்ளவேண்டும். மத்திய தொழிலாளர் நல அமைச்சருடன் நான் கலந்துரையாடியபோது இந்த உச்சாவரம்பினை நீக்குவது பற்றியும், அது இயலாவிடின், உச்சவரம்பின விதத்தை மிகுந்த அளவு உயர்த்துவதுபற்றியும் வலியுறுத்தினேன்.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, அதன்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதை அறிய விரும்புகிறேன்.

1973 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அண்மையில் டெல்லியிலே தொழிலாளர் நலத் துறை அதிகாரிகள் மாநாடு ஒன்று நடந்தது. அந்த மாநாட்டிலே அந்த விகிதாச்சாரத்தை உயர்த்துவதாக அறிவிக்கப்பட்டிருக் கிறது. ஆனுல் அதிகாரப்பூர்வமாக நமக்குத் தெரிவிக்கப்படவில்லே.

திரு. க. துரைசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலளிக்கின்றபொழுது எட்டில் 7 பங்கும், எட்டில் 1 பங்கும் என்ற விகிதாச்சாரத்திலே பணம் ஒதுக்கப்படுவதாகத் தெரிவித்தார்கள். மீதம் மென்று அதிகமான செலவை மாநில அரசாங்கம்தான் ஏற்றுக்கொள்ளவேண்டு மென்று சொல்லியிருப்பதாகத் தெரிவித்தார்கள். மாநில அரசுப் பொறுப் பேற்கிற அதே நேரத்திலே மத்திய அரசும் ஏன் பங்கு கொடுக்கக்கூடாது? மத்திய அரசாங்கம் தன்னுடைய நிதியிலிருந்து ஒதுக்கவேண்டுமென்று வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. என் வி. நடராசன் : ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் இதை எடுத்துக் கூறியிருக்கிறேன். அநேகமாக நம்முடைய வேண்டு கோளுக்கும், எண்ணத்திற்கும் ஏற்ப பதில் வரும் என்று எதிர்பார்க்கிறேன்.

'ழனிக்கருகில் கிடைக்கும் "மொலிப்டினம்"

■ 619 வினு—**புலவர் சி. பழனிச்சாமி :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் 1971-ம் வருடம் டிசம்பர் 9-ம் தேதியன்று வினு எண் 202-க்கு அளித்த விடையையொட்டி தயவுசெய்து கிழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப் பாரா—

மதுரை மாவட்டம், பழனிக்கருகில் உள்ள காடிக்கூட்டம் என்னும் சிற்றூருக்கருகில் மத்திய அரசின்மூலம் மொலிப்டினம் என்னும் மூலப்பொருள் அகழ்ந்தெடுக்கும் பணி இதுவரை எந்த அளவுக்கு நடைபெற்றுள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்திய நிலவியல் ஆய்வுக்கழகம் காடிக் கூட்டம் என்னும் சிற்றூரைச் சுற்றிலும் இதுவரையில் 5433.19 மீட்டர் நிலத்தில் துளேயிடும் பணியை மும்முரமாக மேற்கொண்டுள்ளது. இப்பகுதி களில் அதிக அளவு 60 மீட்டர் ஆழம்வரை மொலிப்டினம் கனிப்பொருள் 36,360 டன் படிந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதுகுறித்த விரிவான அறிக்கை ஒன்று இந்திய நிலவியல் ஆய்வுக் கழகத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

புலவர் சி. பழனிச்சாமி : இப்படி அகழ்ந்தெடுக்கப்படுகிற மூலப் பொருளேப் பயன்படுத்தி பழனிப் பகுதியில் ஒரு தொழிற்சாலையை அமைக்க நம்முடைய மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா? அவர்கள் ஒத்துக் கொள்ளாவிட்டால் அந்த மூலப்பொருளில் நம்முடைய மாநிலத்திற்குப் பங்கு வேண்டுமென வற்புறுத்தப்படுமா?